காலியிடத்தில் சரியான சொல்லை எழுதி கட்டுரையை நிறைவு செய்க.

## நான் ஒரு சமிக்ஞை விளக்கு

நான் சமிக்ஞை விளக்கு. நான் சாலைகளில் முச்சந்தி, நாற்சந்தி போன்ற இடங்களில் நிறுத்தப்பட்டு இருப்பேன். நான் ____________ வர்ணங்களில் இருப்பேன். அவை ___________, ____________, ____________. பச்சை நிறத்தை காட்டும்போது அனைத்து வாகனங்களும் தங்கள் இலக்கை நோக்கி நகரும். மஞ்சள் நிறத்தை நான் காட்டியதும், நகர்ந்து கொண்டிருக்கும் வாகனங்கள் நின்று விட தயாராக வேண்டும். நான் சிவப்பு காட்டிய உடனேயே, வாகனங்கள் ______________ வேண்டும். இது போலவே, அனைத்து வழிகளில் உள்ள வாகனங்களும் நான் காட்டும் நிறத்தைக் கடைபிடிப்பார்கள்.

பாதசாரிகளின் பயன்பாட்டிற்கு நான் பெரிதும் உறுதுணையாக இருப்பேன். பாதசாரிகளுக்காக என்னுள் சிவப்பு மற்றும் பச்சை விளக்கு பொருத்தப்பட்டிருக்கும். பச்சை விளக்கு காட்டும் போது ____________________ சாலையைக் கடக்கலாம். சிவப்பு நிறத்தை நான் காட்டிய உடனேயே, பாதசாரிகள் சாலையைக் கடக்க கூடாது. பாதசாரிகள் என் உடலில் உள்ள பொத்தானை அழுத்தி சாலையைக் கடக்க உதவுகிறேன்.

எனது உதவியுடன் ______________________ சிரமம் இல்லாமல் சாலையை பயன்படுத்துகின்றனர். இதனால், சாலையில் போக்குவரத்து ________________ கட்டுப்படுத்த இயலும். சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்ற பழமொழிக்கு ஏற்ப சிறிய உடலைக் கொண்ட நான் வாகனமோட்டிகள் பாதுகாப்புடன் செல்ல பெரும் உதவியைப் புரிகின்றேன்.

வாகனமோட்டிகள் சாலை விதிகளைக் கடைபிடித்து நடக்க நான் வழி வகுக்கின்றேன். என்னைப் புறக்கணித்தால் கோர விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு. ஆகவே, வாகனமோட்டிகள் என்னைக் கவனமாக பயன்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| பச்சை | பாதசாரிகள் | நெரிசலைக் | மூன்று | நின்று விட |
| மஞ்சள் | சிவப்பு | வாகன ஓட்டிகள் | | |

LIVEWORKSHEETS